**திருச்செங்கோடு நகராட்சி**

**நகர் மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை தீர்மானம், நாள்.31.10.2022 ன் உண்மை நகல்**

**பொருள் எண்.1**

ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2022-ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.2059/2022/சி1)**

**நகர்மன்ற தீர்மானம் எண். 381, நாள்.31.10.2022.**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2022-ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.2059/2022/சி1)**

**நகர்மன்ற தீர்மானம் எண். 382, நாள்.31.10.2022.**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.3**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN28 T8967 டிப்பர் லாரி மஸ்தா வாகனத்திற்கு தகுதிசான்று புதுப்பித்திட தேவையான பழுதுகளை சரிசெய்தும், பெயிண்டிங் ஒர்க்ஸ், எழுத்துப்பணி மற்றும் தகுதி சான்று புதுப்பிக்கும் கட்டணம் செலுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1,35,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிமேற்கொள்ள மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 6916/2022/எச்2**

**நகர்மன்ற தீர்மானம் எண். 383, நாள்.31.10.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN 34 AA 9084 காம்பேக்டர் வாகனத்தில் பழுதுகள் காரணமாக தற்போது இயக்க முடியாத நிலையில் உள்ளது. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதியும் வாகனத்தில் ஆயில் சர்வீஸ் மற்றும் பழுதுகளை சரிசெய்வதற்கும் LRN மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் (TATA Motors), சேலம் என்ற டாடா மோட்டார் அங்கீகாரம் பெற்ற பணிமனை வழங்கிய உத்தேச செலவினத்தொகை ரூ.96,645/-ஐ ஏற்று பணி உத்தரவு வழங்கிடவும் மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 6865/2022/எச்2**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 384, நாள்.31.10.2022.</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN 34 R1365 அபே ஆட்டோவின் வாகன தகுதிசான்று புதுப்பித்திட தேவையான பழுதுகளை சரிசெய்தும், பெயிண்டிங் ஒர்க்ஸ், எழுத்துப்பணி மற்றும் தகுதி சான்று புதுப்பிக்கம் கட்டணம் செலுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.89,500/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிமேற்கொள்ள மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடலாம்.

**கோப்பு எண். 3983/2022/எச்2**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 385, நாள்.31.10.2022.</u>**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN34 U5398 TATA ACE (Dog Catching Vehicle) ஆட்டோவின் வாகன தகுதி சான்று புதுப்பித்திட தேவையான பழுதுகளை சரிசெய்தும், பெயிண்டிங் ஒர்க்ஸ், எழுத்துப்பணி மற்றும் தகுதி சான்று புதுப்பிக்கும் கட்டணம் செலுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.88,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடலாம்.

**கோப்பு எண். 3982/2022/எச்2**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 386, நாள்.31.10.2022.</u>**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN28 R1275 அபே ஆட்டோவின் வாகன தகுதி சான்று புதுப்பித்திட தேவையான பழுதுகளை சரிசெய்தும், பெயிண்டிங் ஒர்க்ஸ், எழுத்துப்பணி மற்றும் தகுதி சான்று புதுப்பிக்கும் கட்டணம் செலுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.89,500/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிமேற்கொள்ள மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடலாம்.

**கோப்பு எண். 3984/2022/எச்2**

**நகர்மன்ற தீர்மானம் எண். 387, நாள்.31.10.2022.**
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

நகர்மன்ற தீர்மானம் எண்.129, நாள்.29.04.2022-இன்படி ரூ.30.00 இலட்சத்திற்கு கீழ்கண்ட பணியை கல்வி நிதி 2022-23-இன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் 28.09.2022 அன்று நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், சேலம் அவர்களிடமிருந்து ரூ.29.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது. அதன்படி, 26.10.2022 அன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் Online-இல் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bid கூராய்வு செய்யப்பட்டு, Price Bid திறக்க அனுமதி பெறப்பட்டது. அதன்படி, 27.10.2022 அன்று Price Bid திறக்கப்பட்டது. வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் ,1. சீத்தாராம்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் முதல் தளத்தில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டிடம் கூடுதலாக கட்டும் பணி **மதிப்பீடு ரூ.29.00 இலட்சம்** | 1. M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு | மதிப்பீட்டை விட (-)0.43 % குறைவு |
| | | 2. M/s துரை கான்ட்ராக்டர்ஸ், நாமக்கல். | மதிப்பீட்டை விட (-)0.23 % குறைவு |
| | | 3. திரு.R.தனபால், திருச்செங்கோடு | மதிப்பீட்டை விட (+)0.55 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)0.43% குறைவாக கொடுத்துள்ள M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**<u>கோப்பு எண் .2922/2022/இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 388, நாள்.31.10.2022.</u>**

மதிப்பீட்டை விட(-)0.43% குறைவாக கொடுத்துள்ள M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்க்கப்பட்டது.

**பொருள் எண்.9**

நகர்மன்ற தீர்மானம் எண்.130, நாள்.29.04.2022-இன்படி ரூ.30.00 இலட்சத்திற்கு கீழ்கண்ட பணியை கல்வி நிதி 2022-23-இன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் 28.09.2022 அன்று நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், சேலம் அவர்களிடமிருந்து ரூ.30.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது. அதன்படி, 26.10.2022 அன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற Online-இல் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bid கூராய்வு செய்யப்பட்டு, Price Bid திறக்க அனுமதி பெறப்பட்டது. அதன்படி, 27.10.2022 அன்று Price Bid திறக்கப்பட்டது. வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, நெசவாளர் காலனி தொடக்கப்பள்ளியில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டிடம் கட்டும் பணி **மதிப்பீடு ரூ.30.00 இலட்சம்** | 1. M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு | மதிப்பீட்டை விட (-)0.42 % குறைவு |
| | | 2. M/s துரை கான்ட்ராக்டர்ஸ், நாமக்கல். | மதிப்பீட்டை விட (-)0.23 % குறைவு |
| | | 3. திரு.R.தனபால், திருச்செங்கோடு | மதிப்பீட்டை விட (+)0.56 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)0.42% குறைவாக கொடுத்துள்ள M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**<u>கோப்பு எண். 2923/2022/இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 389, நாள்.31.10.2022.</u>**

மதிப்பீட்டை விட(-)0.42% குறைவாக கொடுத்துள்ள M/s வினய் கன்ஸ்ட்ரக்சன், திருச்செங்கோடு என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்க்கப்பட்டது.

**பொருள் எண்.10**

நகர்மன்ற தீர்மானம் எண்.131, நாள்.29.04.2022-இன்படி ரூ.30.00 இலட்சத்திற்கு கீழ்கண்ட பணியை கல்வி நிதி 2022-23-இன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் 28.09.2022 அன்று நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், சேலம் அவர்களிடமிருந்து ரூ.29.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது. அதன்படி, 26.10.2022 அன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற Online-இல் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bid கூராய்வு செய்யப்பட்டு, Price Bid திறக்க அனுமதி பெறப்பட்டது. அதன்படி, 27.10.2022 அன்று Price Bid திறக்கப்பட்டது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30, கொல்லப்பட்டி நடுநிலைப்பள்ளி முதல் தளத்தில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டிடம் கூடுதலாக கட்டும் பணி<br>**மதிப்பீடு ரூ.29.00 இலட்சம்** | 1. திரு.R.தனபால், திருச்செங்கோடு<br><br>2. M/s துரை கான்ட்ராக்டர்ஸ், நாமக்கல். | மதிப்பீட்டை விட (-)0.17 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட (+)0.55 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)0.17% குறைவாக கொடுத்துள்ள திரு.R.தனபால், திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**கோப்பு எண் .2921/2022/இ1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 390, நாள்.31.10.2022.**

மதிப்பீட்டை விட(-)0.17% குறைவாக கொடுத்துள்ள திரு.R.தனபால், திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்க்கப்பட்டது.

**பொருள் எண்.11**

திருச்செங்கோடு நகராட்சியில் புதியதாக 289 LED தெருவிளக்குகளை 15வது மத்திய நிதி ஆணையம் (15th CFC) 2021-22 (Untied Grant) திட்டத்தின் கீழ் ரூ.32.69 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31114/2021/CFC, நாள்.14.10.2022-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :-

| வ. எண் | கொள்முதல் செய்யப்படவுள்ள தெருவிளக்குகளின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| I | தெருவிளக்குகள் மட்டும் கொள்முதல் செய்வது (LED Street light fitting alone) | |
| | 1. 20W LED | 39 |
| | 2. 40 W LED | 41 |
| | 3. 60 W LED | 44 |
| II | தெருவிளக்குகள் கொள்முதல் செய்வது மற்றும் மின் இணைப்புடன் (LED Street light with EB line) | |
| | 1. 20W LED | 8 |
| | 2. 40 W LED | 51 |
| | 3. 60 W LED | 106 |
| | **மொத்தம்** | **289 எண்ணிக்கை** |
| III | தெருவிளக்கு கட்டுப்பாட்டு கருவி (Controller) | **10 எண்ணிக்கை** |

மேற்கண்டவாறு, புதியதாக 289 LED தெருவிளக்குகள் மற்றும் 10 தெருவிளக்கு கட்டுப்பாட்டு கருவிகள் 15$^{th}$ CFC 2021-22 (Untied) திட்டத்தின் கீழ் ரூ.32.69 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண் .6164/2021/இ1**

**நகர்மன்ற தீர்மானம் எண். 391, நாள்.31.10.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புத் திட்டத்தினை அறிவித்ததை தொடர்ந்து, முதற்கட்டமாக தேர்வு செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் திருச்செங்கோடு நகராட்சியும் ஒன்றாகும். அதன்படி, திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள கீழ்கண்ட 6 துவக்கப்பள்ளியில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது:-

1. இராஜாகவுண்டம்பாளையம்,
2. சட்டையம்புதூர்
3. மாங்குட்டைபாளையம்,
4. நெசவாளர் காலனி,
5. செங்கோடம்பாளையம்
6. சின்னபாவடி

இத்திட்டத்தினை செயல்படுத்த, அனைத்து பள்ளிகளுக்கும் ஒருங்கிணைந்த மைய சமையல்கூடத்திலிருந்து சமைக்கப்பட்ட உணவை வாகனத்திலிருந்து பெற்று மாணவர்களுக்கு பரிமாறும் பணியை மேற்கொள்ள, 100 மாணவர்களுக்கு ஒரு பணியாளர் வீதம், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களின் பரிந்துரையின் அடிப்படையில், இந்நகராட்சி ஆணையாளர் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண்.3968/2022/என்1, நாள். 08.09.2022-இன்படி 9 நபர்கள் காலை உணவு பரிமாறும் பணியாளராக பணிபுரிய அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், இப்பணிக்கு அரசால் நிர்ணயிக்கப்படவுள்ள மதிப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.1500/- வீதம் 2022-23 கல்வி ஆண்டிற்கு ரூ.1,10,000/- தோரயமாக செலவாகும் எனக் கணக்கீடப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/மாநஅ-2, நாள். 29.08.2022-இன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது,

எனவே, காலை உணவு பரிமாறும் பணியாளர்களுக்கு 2022-23 கல்வி ஆண்டிற்கு வழங்க வேண்டிய மதிப்பூதியத்திற்கான செலவினம் ரூ.1,10,000/-த்தை இந்நகராட்சி கல்வி நிதி 2022-23-இன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண். 3968/2022/என்1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 392, நாள்.31.10.2022.</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.21-ல் உள்ள இராஜகவுண்டம்பாளையம் துவக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த மைய சமையல் கூடம் புதியதாக கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்கண்ட பள்ளியின் சுற்றுசுவர் வர்ணம் பூசுதல், ஒருங்கிணைந்த மைய சமையல் கூடத்திற்கு Ro Plant அமைத்தல், கொசுவலை அமைத்தல் மற்றும் இதர மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூ.5,00,000/-க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதி 2022-23-ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண் .7048/2022/ இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 393, நாள்.31.10.2022.</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.30 கொல்லப்பட்டி நகராட்சி நடுநிலைப்பள்ளியில், பள்ளி சுவர்களுக்கு வர்ணம் பூசுதல், உடைந்த டைல்ஸ்களை சரிசெய்தல், பழுதடைந்த மின் விசிறிகளை மாற்றம் செய்தல், கதவு ஜன்னல் புதுப்பித்தல், கொசுவலை அமைத்தல் மற்றும் தேசிய தலைவர்களின் படம் சுற்றுசுவரில் வரைதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வார்டு பகுதி மக்கள், வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக்கொள்ளனர். அதன்படி, பள்ளியை ஆய்வு செய்ததில் மேற்கண்ட பணிகள் உடனடியாக மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதி 2022-23-ல் இருந்து கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண் .6115/2022/ இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 394, நாள்.31.10.2022.</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.25, மேட்டுத்தெரு எண்.3-ல் உள்ள சிமெண்ட் சாலை மற்றும் சிறுபாலம் (Culvert) மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் இரு சக்கர வாகனங்களில் சென்று வர மிகவும் சிரமமத்திற்கு ஆளாகின்றனர். இது தொடர்பாக மேற்கொண்ட ஆய்வில் உடனடியாக சாலையை சீரமைத்து (Patch Work) புதியதாக சிறுபாலம் (Culvert) அமைக்க தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட பகுதியில் உள்ள சிமெண்ட் சாலையை சீரமைத்து (Patch Work) சிறுபாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் 2022-23 இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண் .6977/2022/ இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 395, நாள்.31.10.2022.</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான கொக்கராயன்பேட்டை பகுதியில் உள்ள பழைய குடிநீர் ஏற்று நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் தற்போது பயன்பாட்டில் இல்லாததால் முட்புதராக உள்ளதை நகர் மன்ற தலைவர் நேரடி ஆய்வில் தெரியவந்தது. எனவே, ஆக்கிரமிப்பு மற்றும் சமூக விரோத செயல்களை தவிர்க்கும் பொருட்டு மேற்படி, இடத்தில் உள்ள முட்புதர்களை அகற்றி சுத்திகரிப்பு நிலையத்தின் எல்லைப்பகுதியினை சுற்றிலும் கம்பி வேலி அமைத்து பாதுகாக்க நகர் மன்ற தலைவர் கேட்டுக்கொண்டதன்படி, மேற்படி இடத்தில் உள்ள முட்புதர்களை அகற்றி சுற்று பகுதி முற்றிலும் முள்கம்பி வேலி அமைத்து பாதுகாக்கலாம். இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண் .7214/2022/ இ1</u>**

**<u>நகர்மன்ற தீர்மானம் எண். 396, நாள்.31.10.2022.</u>**

அனுமதிக்கப்பட்டது.

.

(ஒம்)/நளினி சுரேஷ்பாபு,
நகர் மன்ற தலைவர்,
திருச்செங்கோடு நகராட்சி.

//உண்மைநகல்//

ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி.